# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

# DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW-4 | Taluk | : | |
| Name | : | திரு.சரவணன் | Occupation | : | |
| Father Name | : | திரு. சிங்காரம் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 21.7.2025**

A1 absent. U/sec.355 BNSS petition filed and allowed. A2 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் பாலோப்ப நந்தவனத்தில் குடியிருக்கிறேன். தேவி எலக்கட்டிரிக்கலில் மேனஜராக வேலை பார்க்கிறேன். இறந்துபோன ரமேஷ் எனது சித்தி மகன். அவர் M.E படித்துள்ளார். அவர் விக்னேஷ் ஏஜென்சியில் ஆர்டர் எடுக்கும் வேலையும், வெளியே போய் கலெக்சன் செய்யும் வேலையும் பார்த்தார். அ.சா.2 சத்யா எனது அக்கா மகள். அ.சா.3 ராமகண்ணன் எனது சித்தி மகன். சத்யாவைதான் ரமேஷ்க்கு திருமணம் செய்து கொடுத்தோம். 25.5.2017 அன்று காலை 7.45 மணிக்கு ஓனர் மணிகண்டன் போன் பண்ணி வெட்டு காயத்துடன் ரமேஷ் இருக்கிறார் இரத்தமாக கிடக்கிறது வாருங்கள் என்று சொன்னார். இந்த விஷயத்தை எனது உறவினர் சுரேஷ்க்கு போன் மூலம் சொன்னேன். அவரும் வந்தார். விக்னேஷ் ஏஜென்சிக்கு போய் பார்த்தோம். அங்கு மாடி படிகட்டில் மணிகட்டிலும், கழுத்திலும் வெட்டுபட்டு இரத்தமாக கிடந்தார். உறவினர்கள் வந்தபிறகு நான் பார்த்ததாக சொன்னேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.